# பண்பாட்டுப் புரட்சியில், கழகமும் கலைஞரும்!



■ நீரை.மகேந்திரன்

சமுதாய மாற்றம் என்பது ஒரு நீண்ட பயணம். ஒரு தடவை நிகழ்த்தப்படும் சமூகப் புரட்சியுடன் அந்த இலக்கை அடைந்துவிட முடியாது. ஒரு புரட்சியுடன் சமூகத்தில் நிலவும் எல்லா முரண்பாடுகளையும் களைந்துவிட முடியாது. படிப்படியாகக் கட்டவிழ்ந்து செல்லும் தொடர்ச்சியான பணிகள் மூலமே சமத்துவ சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும். இது தொடர்பான உலக அனுபவங்கள், படிப்பினைகள் ஏராளம்.

இந்தியச் சமூகச் சூழலுக்கு ஏற்ப, திராவிட இயக்கம் முன்வைத்த பிரதிநிதித்துவக் கோட்பாடுகள், சமுதாய மாற்றத்தின் தொடக்கப் பயணங்கள் எனலாம். அதை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாட்டின் பண்பாட்டு பரப்பில், பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அந்தப் பண்பாட்டு புரட்சியில் தி.மு.கழகத்தின் பங்கு கணிசமானது.

ஆட்சி அதிகாரத்துக்கு முன்பும், பின்பும் மற்றும் அதிகாரத்தில் இருந்தாலும் அதிகாரத்துக்கு வெளியே இருந்தாலும் பண்பாட்டு வெளியில் பெரும் பாய்ச்சலை நிகழ்த்திய இயக்கமாக தி.மு.க. இருந்து வருகிறது. தொடக்கக் கால படிப்பகங்களில் இருந்து, இலவச வண்ணத் தொலைக்காட்சி, சமகாலத்தில் மாவட்டம் தோறும் புத்தகக் கண்காட்சிகள் வரை பண்பாட்டு மாற்றத்துக்கு தமிழ்நாட்டை வழி நடத்தியது திமுகழகம்தான் என்பதற்கு தரவுகள் சான்றளிக்கின்றன.

## உலகளாவிய பார்வை

உலகளாவிய பார்வையுடன் இந்தியச் சூழலுக்கு ஏற்ப ஓர் அரசியல் கட்சி செயல்பட வேண்டிய விதத்தில் பேரறிஞர் அண்ணா பல பரிசோதனைகளை நிகழ்த்தினார். மக்களை விழிப்புறச் செய்வது, அரசியல் மயப்படுத்துவது, மனித உறவுகளை மேம்படுத்துவது, ஜனநாயகத்தை முழுமையான வகையில் கடைபிடிப்பது என்பதை தி.மு.கழகத்தின் வழிமுறைகளாகவே அவர் முன்னெடுத்தார். அவரைப் பொறுத்தவரை, தமிழ்நாட்டின் பண்பாட்டுப் புரட்சியானது சமூகநீதி - சமத்துவ சமூகக் கட்டமைப்பை உள்வாங்கிய மாநிலமாகத் திகழ வேண்டும் என்பதற்கான நகர்வு.

தி.மு.கழகம் மக்களை அரசியல் மயப்படுத்துவதற்கும், விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும் தளமாக பயன்படுத்தியவை படிப்பகங்கள்.

**கலைஞரின் லட்சியங்கள் உன்னதமானவை. அந்த லட்சியங்களை அடைவதற்கு அவர் கையாண்ட வழிமுறைகள், ஜனநாயகத் தன்மை கொண்டவை.**

மிகப்பெரிய வாசிப்பு இயக்கம் அதன் ஊடாக முன்னெடுக்கப் பட்டது. சமீபத்தில், நமது முதலமைச்சர் ஒரு நிகழ்ச்சியில் குறிப்பிட்டதைப் போல, அந்தக் காலக் கட்டங்களில் தெரு முனைகள், தேநீர்க் கடைகள், முடி திருத்தகங்கள் கழகத்தின் கொள்கை பேசும் கல்லூரிகளாக விளங்கின. பட்டித் தொட்டி எங்கும் நிகழ்த்தப்பட்ட அந்த வாசிப்புப் பேரியக்கம்தான் அரசியல் பண்பாட்டு மாற்றங்களை தமிழ்நாட்டில் நிகழ்த்தியதில் பெரும் பங்கு வகிக்கிறது. தி.மு.கழகம் நிகழ்த்த விரும்பிய அரசியல் விழிப்புணர்வு, மனித உறவுகளை மேம்படுத்துவது ஆகியவற்றை ஒரே புள்ளியில் இணைத்தன கழகத்தின் படிப்பகங்கள். 1957ஆம் ஆண்டு தி.மு. கழகம் முதன் முதலில் தேர்தலைச் சந்தித்தபோது தேர்தல் திட்டமிடும் அலுவலகமாக அந்தப் படிப்பகங்கள் இருந்தன.

கழகத்தின் தொடக்க கால பண்பாட்டுப் புரட்சிகளில் கலைத் துறையும் பெரும் பங்கு வகித்தது. பகுத்தறிவு, சுயமரியாதை, மூடநம்பிக்கை ஒழிப்பு ஆகியவற்றுடன் எதிர்காலம் குறித்த அரசியல் பாடம் எடுக்கும் வகுப்புகளாக திரைப்படங்கள் அமைந்தன. அவை தனியாகவும் விரிவாகவும் எழுதும் அளவுக்கு ஆழம் கொண்டவை. அந்தக் காலகட்டங்களில் கலைஞரின் தனித்தன்மையான எழுத்துகள், நாவன்மை, செயல்பாட்டு வேகம் எல்லாம் பண்பாட்டுப் புரட்சியின் முன்னணிப் படையை வழிநடத்தும் தன்மை கொண்டவை.

## களமும் நிலமும்...

பேரறிஞர் அண்ணா தனது காலத்தில் தமிழ்நாட்டின் பண்பாட்டுக் களத்தை தயார் செய்து வைத்தார் எனில், முத்தமிழறிஞர் கலைஞர், பெரியாரும் அண்ணாவும் கண்ட கனவை செயல்படுத்திக் காட்டியவராக இருந்தார். சமீபத்தில் வெளியான **‘என்றும் தமிழர் தலைவர்’** நூலில் அது குறித்து நமது முதலமைச்சர் எழுதியுள்ள கட்டுரையில்

‘‘தமிழர்கள் வாழும் தமிழ்நாட்டுக்கு ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்டக்கூட முடியாத நிலை இருக்கிறதே” என்று 1956 ஆம் ஆண்டு தன்னைத்தானே நொந்துகொண்டார் தந்தை பெரியார். 1968 ஆம் ஆண்டு ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்டினார் பேரறிஞர் அண்ணா.

சாதியின் பெயரால் கல்வி மறுக்கப்பட்ட, வேலைவாய்ப்பு பெற முடியாத சூத்திர சாதிப் பிள்ளைகள் அனைவரும் படித்து முன்னேற வேண்டும், வேலைவாய்ப்புகளைக் கைப்பற்ற வேண்டும் என்று பெரியார் விரும்பினார். அந்த முன்னேற்றத்தைப் பார்த்தார்” எனக் குறிப்பிடுகிறார்.

## நுட்பமான மாற்றங்கள்

பெரும் மக்கள்திரளில் புரட்சிகரமான மாற்றங்களை நிகழ்த்த வேண்டும் எனில், பழைய சிந்தனை மரபுகளை அழித்துவிட்டு புதிய சிந்தனை போக்கினை உருவாக்க வேண்டியது அவசியமானது. இல்லையெனில், புரட்சிகரமான ஆட்சி மாற்றம் நிகழ்ந்தாலும், மக்கள் மனங்களில் அந்த மாற்றத்தை ஏற்றுக்கொள்ள வைக்க முடியாது என்பது அடிப்படைப் பாடமாகும். இதை அறிவார் கலைஞர்.

ஆட்சி மாற்றத்தால் சட்ட ரீதியான முன்னெடுப்புகளைச் செய்தாலும் பண்பாட்டுத்தளங்களில் நிகழ்த்த வேண்டிய மாற்றங்களிலும் அவர் அதனை தொடர்கிறார். அதற்கு பல நுட்பமான உதாரணங்களைக் காட்ட முடியும்.

சிலப்பதிகாரத்தை முன்வைத்து தமிழ்நாட்டில் புதிய பண்பாட்டு மரபினை முன்வைத்தவர் அவர்தான். ஆட்சிக்கு முன்பும் ஆட்சிக்குப் பின்னரும் அந்த மரபை அவர் உயர்த்திப் பிடிப்பவராக இருக்கிறார்.

புலவர் குழந்தை எழுதிய நூல் **‘இராவண காவியம்’**. 1948 ஆம் ஆண்டில், அந்த நூல் தடை செய்யப்பட்டது. 1971 ஆம் ஆண்டில் அந்த நூலுக்கான தடையை நீக்குகிறார் கலைஞர். அதற்கு அவர் ஒரு விளக்கம் அளிக்கிறார். வடக்கில் தொடங்கி தெற்கு நோக்கிப் பயணிக்கும் ஒரு மன்னன் மகனின் கதையை ராமாயணம் எடுத்துக் காட்டுகிறது என்றால், தெற்கில் தொடங்கி வடக்கே பயணிக்கும் காவியம் ‘ராவண காவியம்’ என்று கூறி அந்த புத்தகத்தின் மீதான தடையை நீக்குகிறார்.

திருவள்ளுவர் மரபினை அவர் உயர்த்திப் பிடித்ததும், வள்ளுவம் தொடர்பான அடையாளங்களை உருவாக்கியதும், அவரது தமிழ்ப் பற்று மட்டும் காரணமாக இருக்கவில்லை. வள்ளுவத்தை உலகப் பொதுமறையாக அவர் முன் வைத்ததையும், ஒரு மாற்றுப் பண்பாட்டின் தொடர்ச்சி என்பதாகவே பார்க்கலாம். மனுநீதியின்பால் சொல்லப்பட்ட கருத்துக்களை உடைக்க, வாழ்நாள் முழுவதும் வள்ளுவம் பேசுபவராக இருந்தார். இப்படித் தொடர்ச்சியாக பண்பாட்டுத்தளத்தில் அவர் முன்வைத்த மாற்று மரபுகள் வியப்பளிப்பவையாக இருக்கின்றன.

கலைஞரின் லட்சியங்கள் உன்னதமானவை. அந்த லட்சியங்களை அடைவதற்கு அவர் கையாண்ட வழிமுறைகள், ஜனநாயகத் தன்மை கொண்டவை. முழுமுற்றாக தனது ஆற்றல் என்ன என்பதை அறிந்து அந்த லட்சியங்களை சாத்தியமாக்குவதற்கான வழிகளை கையாண்டார். நடைமுறை சாத்தியமாக கூடிய எல்லா வழிகளையும் வழிகளிலும் அவர் தொடர்ந்து இயங்கினார்.

-தொடரும்

## திராவிட இயக்க இதழ்கள் - ‘தமிழ்நிலம்’

‘பாவலரேறு’ என்று தமிழறிஞர் தேவநேயப் பாவாணரால் அழைக்கப்பட்ட, ‘பாவலரேறு’ பெருஞ்சித்திரனார் அவர்கள் நடத்திய இதழ் ‘தமிழ்நிலம்’. இது 1982 நவம்பர் 7 அன்று தொடங்கப்பட்டது.



1981 ஆம் ஆண்டு ‘உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்’ என்ற அமைப்பை பெருஞ்சித்திரனார் தோற்றுவித்தார். அந்த அமைப்பின் இதழாகவே ‘தமிழ்நிலம்’ வெளியிடப்பட்டது. இது வார இதழாக வெளிவந்தது.


ஏற்கெனவே தமிழ் மொழி வளர்ச்சிக்கு என ‘தென்மொழி’, மாணவர்களுக்காக ‘தமிழ்ச்சிட்டு’ என இரண்டு இதழ்களை நடத்தி வந்த பெருஞ்சித்திரனார், இந்த இதழ்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டு, தான் கொண்ட அரசியல் நிலைகளுக்காகவே இதழொன்றைத் தொடங்க வேண்டுமென்று எண்ணினார். அதன்படி ‘அரசியல்’ என்னும் தலைப்பில் இதழ் கொணர எண்ணி அதற்கான அறிவிப்பையும் வெளியிட்டார். ‘அரசியல்’ என்னும் தலைப்பில் கொணர முடியாமல் ‘தமிழ் நிலம்’ என்னும் பெயரைத் தாங்கி இந்த இதழ் வெளிவந்தது.

‘தமிழ் நிலம் உங்கள் இதழ்!
உங்கள் சொத்து!
உங்களுக்கு உரிமை பெற்றுத்
தரும் படைக்கலம்!
ஒவ்வோரிதழும் தமிழ்நில
உரிமைக்கு ஒருபிடி
எருவாக உதவுதல் வேண்டும்’

என்று ‘தமிழ்நிலம்’ உருவான காரணத்தை, ‘பா’ வடிவில் வெளியிட்டார். மேலும் உலகமெல்லாம் பரவியிருந்த தமிழர்களில் இருந்து இந்த இதழுக்காக பொறுப்பாசிரியர், கட்டுரையாசிரியர், செய்தியாசிரியர், விளம்பரக் குழுவினர், ஓவிய ஆசிரியர் ஆகியோரையும் தேர்வு செய்து, அந்தப் பட்டியலை இதழில் பாவலரேறு வெளியிட்டார்.

தொடக்கத்தில், எட்டு இதழ்களே வெளிவந்தன. பின்னர் மாதத்துக்கு இரண்டு இதழாகவும், பின்னர் மாத இதழாகவும் வெளியானது. பெருஞ்சித்திரனார் மறைவுக்குப் பிறகு சில இதழ்களோடு நின்றுபோனது. சில ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் அதே பெயரில், அவரது குடும்பத்தினர் சில காலத்துக்குக் கொண்டு வந்தனர்.

## :ப்ளாஷ்பேக்



### வரவேற்பும் வழக்கு நிதியும்!

1976 ஆம் ஆண்டில், அவசர நிலைக் காலத்தில், கழக அரசு கலைக்கப்பட்டு எண்ணற்றோர் சிறையில் வாடிய நேரத்தில், சில மாதங்கள் கழித்து, அவ்வப்பொழுது சிலர் விடுதலையாகினர். விருதுநகரில் அவ்வாறு வெளிவந்த மிசா தியாகிகளுக்கு வரவேற்பும், தி.மு.க வழக்கு நிதி வழங்குதலும், அப்போதைய கவிதா கலைமன்றக் கொட்டகை அரங்கில் நடைபெற்றது. 23 வயது இளைஞனாக நான், அந்த நிகழ்வுக்கு வருகை தந்திருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம் ஆறுதல் தெரிவித்து வழக்குநிதி வழங்கினேன். உடன் நகர தி.மு.க பொறுப்பாளர் வ.பெ.வடிவேல், கருப்பசாமி ஆகியோர் உள்ளனர்.



கவின் க.முருகேசன்

**-கவின் க.முருகேசன், நகர மன்ற முன்னாள் உறுப்பினர், விருதுநகர்**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி :அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### பிற்படுத்தப்பட்டோர் அமைச்சரகம்

**1971 ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சியில், தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கெனத் தனி அமைச்சகம் உருவாக்கப் பட்டது. தனி அமைச்சர், துறைக்கான மானியக் கோரிக்கை என அறிமுகப்படுத்தப்பட்டன. ஆனால், அவை முழுமையாகச் செயல் படாமல் முடங்கி இருந்த நிலையில், 1989-இல் கலைஞர் மீண்டும் ஆட்சிக்கு வந்ததும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை வளர்ச்சி வேகம் எடுத்தது. தனித் திட்டங்கள், செயல்முறைகளை வகுத்திட தலைமைச் செயலகத்தில் தனி நிர்வாகம் உருவாக்கப்பட்டது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 340




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131